National Healthcare Group
Adding years of healthy life

நோயாளிகள் மற்றும் குடும்பங்களுக்கான வழிகாட்டி

# குடல் அடைப்பு




## குடல் அடைப்பு என்றால் என்ன?

குடல் அடைப்பு என்பது சிறுகுடல் அல்லது பெரிய குடலில் ஏற்படும் அடைப்பு ஆகும், இது உணவு, திரவம் அல்லது வாயு கடந்து செல்வதைத் தடுக்கிறது.



சிகிச்சை அளிக்கப்படாவிட்டால், குடலின் அடைபட்ட பகுதிகள் இறந்து விடக்கூடும் மேலும் கடுமையான பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். இருப்பினும், உடனடி மருத்துவ சிகிச்சையின் மூலம், அதை வெற்றிகரமாக குணப்படுத்த முடியும்.


## குடல் அடைப்பு எதனால் ஏற்படுகிறது?



கட்டிகள், வடு திசுக்கள் (ஓட்டுத்திசுக்கள்), அல்லது குடல்கள் முறுக்கல் அல்லது குறுகல் ஆகியவை குடல் அடைப்பை ஏற்படுத்தும். இதை **இயந்திரத் தடைகள்** என்று அழைக்கப்படுகின்றன.



சிறுகுடலில், வடு திசுக்கள் பெரும்பாலும் காரணமாகும். குடலிறக்கங்கள் மற்றும் குடகலச் சுருட்டதவா அல்லது சுருக்கதவா கூடிய குதரான்ஸ் நோய் மற்றும் குடல் பாகையில் தடை ஏற்படுத்தக்கூடிய கட்டிகள் ஆகியவை மற காரணிங்களாகும். குடலின் ஒரு பகுதி தொலைநோக்கி போல மடிந்து மற்றொரு பகுதிக்குள் நுழைந்தாலும் அடைப்பு ஏற்படலாம். இது **இன்டஸ்சசெப்ஷன்** எனறு அழைக்கப்படுகிறது.



பெருங்குடலில், புற்றுநோய் இதற்கு பெரும்பாலும் காரணமாகும். கடினயான மலத்தால் ஏற்படும் கடுமையான மலச்சிக்கல், மற்றும் டைவர்டிகுலிடிஸ் அல்லது குடல் அழற்சி நோயால் ஏற்படும் குடல் குறுகுதல் ஆகியவை இதற்கு மற்றக் காரணிங்கள்.

# அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள்



வயிற்றுப் பகுதி
வீக்கம் மற்றும்
வயிறு உப்புசம்



வயிற்றுப் பகுதி
வலி அல்லது
பிடிப்புகள்



மலச்சிக்கல்



வயிற்றுப்போக்கு



வாந்தி




வாயுவை
வெளியேற்ற
முடியாமை




வாய் துர்
நாற்றம்

# பரிசோதனை மற்றும் நோய் கண்டறிதல்



முதலில், மருத்துவர் உங்கள் மருத்துவ வரலாறு மற்றும் அறிகுறிகளைக் கேட்பார். பின்னர் மருத்துவர் வயிற்று வீக்கம் அல்லது உங்கள் வயிற்றில் கட்டி இருக்கிறதா என்று பார்க்க உடல் பரிசோதனை செய்வார். தடைகளைக் கண்டறிய மருத்துவர் உங்கள் வயிற்றில் காதை கவத்துக் கேட்கலாம்.

குடல் அடைப்பைக் கண்டறிய அல்லது உறுதிப்படுத்த, மருத்துவர் வயிற்று எக்ஸ்ரே அல்லது கணினிமயமாக்கப்பட்ட டோமோகிராபி (CT) ஸ்கேன் பரிந்துரைக்கலாம். இது அகடப்பு ஏற்பட்ட இடத்தைக் கண்டுபிடித்து அடைப்புக்கான காரணத்தைக் கண்டறிய உதவுகிறது.



# சிகிச்சை



திரவம் மற்றும் வாயுவை அகற்ற உங்கள் வயிற்றில் மூக்கின் வழியாக ஒரு நாசோகாஸ்ட்ரிக் குழாயைச் செருகலாம். இது உங்கள் வயிற்று வீக்கத்தைக் குறைக்கும்.

உங்களுக்கு எந்த உணவு அல்லது பானமும் கொடுக்கப்படாது என்பதால், நீரிழப்பைத் தடுக்க உங்களுக்கு நரம்பு வழியாக திரவங்கள் வழங்கப்படும்.



உங்களுக்கு பகுதியளவு அடைப்பு மட்டுமே இருந்தால், உங்களுக்கு மேலும் சிகிச்சை தேவைப்படாமல் போகலாம். உங்கள் அடைபட்ட குடலைச் செயலாக்குவதை எளிதாக்கும் குறைந்த நார்ச்சத்துள்ள உணவை மருத்துவர் பரிந்துரைக்கலாம்.

இருப்பினும், அடைப்பு தானாகவே நீங்கவில்லை என்றால், உங்களுக்கு அறுவை சிகிச்சை தேவைப்படலாம்.



உங்கள் குடலின் பாதிக்கப்பட்ட பகுதி இறந்துவிட்டால், குடலின் நோயுற்ற பகுதி அகற்றப்படும், மீதமுள்ள பகுதி தோலில் உள்ள ஒரு திறப்பில் தைக்கப்பட்டு ஒரு கொலோஸ்டமி அல்லது இலியோஸ்டமியை உருவாக்கலாம். மலம் உடலில் இருந்து திறப்பு வழியாக வெளியேறி, ஒரு டிஸ்போசபிள் ஆஸ்டமி பையில் சேகரிக்கப்படுகிறது.

நீங்கள் முழுமையாக குணமடையும் வரை இது தற்காலிகமாக இருக்கலாம்.

# மற்றவைகள்

உங்களுக்கு வழங்கப்படும் சிகிச்சையைப் பொறுத்து, உங்கள் மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் தொடர் சிகிச்சை குறித்து மேலும் ஆலோசனை வழங்குவார்கள். தேவைப்படும்போது கூடுதல் தகவலுக்கு அவர்களை அணுகவும்.

National Healthcare Group
Adding years of healthy life

NHG cares it's in your hands

NHG-NUR-BRO-2024-00105-TV1

Copyright © 2025 National Healthcare Group